# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் - 2023 பற்றிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) அறிக்கை

அரசாங்கம் மார்ச் 22, 2023 அன்று வர்த்தமானியில் 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்' வெளியிட்டமை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) அவதானம் செலுத்துகிறது. இந்தச் சட்டமூலம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) ஒழித்து பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்த முயல்கிறது. இத்தகைய சட்ட சீர்திருத்தங்கள், தொடர்ச்சியான ஜனாதிபதி ஆட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட PTA மற்றும் அவசரகால அதிகாரம் ஆகியவற்றின் துஷ்பிரயோகங்களின் ஜனாதிபதிக்கு பரந்த அதிகாரங்களை வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடனும் மட்டுப்பாடுகளுடன் வழங்குகின்ற தற்போதைய வரைவு ஆகியவற்றுடன் இணைத்து, தற்போதைய சட்டமூலம் தொடர்பில் குறிப்பாக இலங்கையில் சிறுபான்மையினர், மற்றும் எதிர்ப்பாளர்கள் ஆகியோரை இலக்கு வைத்து அதிகாரிகள் பாதுகாப்புச் சட்டங்களைப் பயன்படுத்துகின்றமை, இதன் மூலம் இலங்கையில் சித்திரவதை மற்றும் தண்டிக்கப்படாத கலாச்சாரம் நிலைநிறுத்தப்படுகின்றமை என்பன தொடர்பில் தீவிர அவதானம் தேவை என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறிப்பிடுகிறது. பயங்கரவாத எதிர்ப்பு என்ற போர்வையில் நபர்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்தும் கலாச்சாரத்தை மாற்றுவதற்கான உண்மையான அரசியல் விருப்பம் இல்லாத நிலையில் சட்டச்சீர்திருத்தத்தினால் மட்டுமே பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மீண்டும் வலியுறுத்துகிறது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் மீதான இந்த ஆரம்ப கருத்துரையில் 2018ஆம் ஆண்டு அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, ஆனால் பின்னர் நாடாளுமன்றத்தால் ஒருபோதும் நிறைவேற்றப்படாத பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது (the 2018 CTA) தற்போதைய சட்டமூலத்துடன் குறிப்பிடத்தக்க ஒற்றுமையைக் கொண்டிருப்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அவதானிக்கிறது. இருப்பினும் 2018 CTA இல் ஒரு பகுதியாக இல்லாத பல குற்றச்செயல்கள் தற்போதைய சட்ட மூலத்தில் உள்ளன, அவற்றில் சில கருத்துச் சுதந்திரத்தின் மீது தீவிர அக்கரையை எழுப்புகின்றன. மேலும் இச்சட்டமானது கருத்து வேறுபாடு மற்றும் விமர்சனங்களை முறியடிப்பதற்கான சாத்தியமான ஒரு கூடுதல் கருவியை அரசுக்கு வழங்கும். மேலும். இந்தச் சட்டமூலத்தின் ஒரு முன்னேற்றம் என்னவென்றால் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேக நபரினால் பொலிஸ் அதிகாரியிடம் வழங்கப்பட்ட வாக்குமூலங்கள் இனிமேல் ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்படாது. இது சாதாரண சட்டத்தில் உள்ள ஒரு பொதுவான கொள்கையாகும். PTA இல் இதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. தடுப்புக்காவலில் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் 'கட்டாய வாக்குமூலங்கள்' கலாச்சாரத்தை உருவாக்கியது. மேலும் அது முறைப்படுத்தப்பட்ட அநீதிகளுக்கு வழிவகுக்கிறது.

எவ்வாறாயினும், தடுப்பு வைத்தற் கட்டளை பற்றிய ஒரு முக்கிய கரிசனை உள்ளது. தடுத்துவைத்தற் கட்டளை உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரத்தை பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு இச்சட்டமூலம் வழங்குகிறது. இந்த அதிகாரம், பயங்கரவாதச் சட்டத்தின் (PTA) கீழ் பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், பிரதிப் பொலிஸ் மா அதிபரின் ஆரம்பநிலை

2018 CTA இரண்டு வாரங்கள் வரை நீடிக்க அனுமதித்தாலும், தற்போதைய சட்டமூலமானது, PTA இன் கீழ் மூன்று மாதங்கள் வரை தடுத்துவைக்கும் உத்தரவு போன்றதாகும். அத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித காரணியும் இல்லை என்றாலும் கூட, இந்தச் சட்டமூலத்தின் கீழ் குற்றம்சாட்டப்பட்ட நபர்களின் சுதந்திரத்தை நசுக்க வழியுண்டு என்பது ஒரு பிரதான கரிசனையாகும். தடுப்புக்காவல் உத்தரவுகள் ஆரம்ப 3 மாதங்களுக்கு அப்பால் ஒரு வருடம் வரை நீடிக்கப்படலாம். ஆனால், நீடிப்பை ஒரு நீதவான் அங்கீகரிக்க வேண்டும்.

இச்சட்டமூலத்தின்படி அமைப்புக்களுக்கு எதிரான 'தடையுத்தரவு' பிறப்பிக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. பயங்கரவாத குற்ற செயல்களில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டப்பட்ட அமைப்புகளுக்கு எதிராக இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு அமைப்பு 'இலங்கை அல்லது வேறு எந்த நாட்டினதும் தேசிய பாதுகாப்பிற்குப் பாதகமாக செயல்படுவதாக ஜனாதிபதிக்கு 'நியாயமான காரணங்கள்' இருந்தாலும் அவற்றை தடை செய்யலாம். இந்த பரந்த அதிகாரம் நாட்டில் சட்டபூர்வ எதிர்ப்பை குறிவைக்க பயன்படுத்தப்படலாம். இது அண்மைக்கால ஒடுக்குமுறைகளின் அடிப்படையில் மிகவும் சாத்தியமானதாகக் கருதப்பட வேண்டும்.

PTAஜப் போலவே, இச்சட்டமூலத்திலும் ஒழுங்குமுறைகளை உருவாக்குவதற்கு ஜனாதிபதிக்கு பரந்த அதிகாரங்கள் உள்ளன. பல ஆண்டுகளாக PTAஇன் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறைகள் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கரிசனை எழுப்பியுள்ளது. அவைகள் அடக்குமுறை மற்றும் துஷ்பிரயோகத்தின் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படும் சாத்தியம் உள்ளது. குடிமக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு இந்த ஒழுங்குமுறைகளை உருவாக்கும் அதிகாரம் குறைக்கப்படவேண்டும். புனர்வாழ்வு செயன்முறைகளின் போது இடம்பெற்ற துஷ்பிரயோகங்கள் மற்றும் அடிப்படை உரிமை மீறல்களின் வரலாற்றை கருத்தில் கொண்டு, சட்டமா அதிபர் நடவடிக்கையை ஒத்திவைக்க/ இடைநிறுத்த பரிந்துரைத்த நபர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களை நடைமுறைபடுத்துவதற்கான விதிமுறைகளை வெளியிடுவதற்கு இச்சட்டமூலத்தின்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் விசேட கரிசனைக்குரியது. 2021ஆம் ஆண்டில் PTA இன் கீழ் இதேபோன்ற விதிமுறைகளை எதிர்த்து CPA ஒரு அடிப்படை உரிமைகள் விண்ணப்பத்தை தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றம் இந்த விதிமுறைகளின் நிறுத்தி வைத்தது.

சட்டமூலத்தில் உள்ள 'பயங்கரவாதக் குற்றம்' என்பதன் வரைவிலக்கணம் மிகவும் பரந்துபட்டதாகவும் 'பிராந்திய ஒருமைப்பாட்டை மீறும் செயல்கள் அல்லது இலங்கை அல்லது பிற இறையான்மை கொண்ட நாட்டின் இறையான்மையை மீறுதல்' போன்ற தெளிவற்ற வரையறுக்கப்படாத கூறுகளைக் கொண்டிருப்பதாகவும் CPA குறிப்பிடுகிறது. இலங்கையின் சர்ச்சைக்குறிய அடக்குமுறை, மற்றும் பயங்கரவாத சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வரலாறு என்பவற்றை கருத்தில்கொண்டு இத்தகைய சொற்களின் பயன்பாடு கரிசனையை தோற்றுவிக்கிறது. இதைவிட, 'பயங்கரவாதக் குற்றம்' தொடர்பான இந்த வரைவிலக்கணமானது துல்லியமற்றதாகவும், விகிதாசாரதன்மை மற்றும் சட்டபூர்வ கொள்கைகளைக் கடைப்பிடிப்பது தொடர்பில் குறைபாடுகளையும் கொண்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தை சுற்றியுள்ள இரகசியத்தன்மை மற்றும் அதன் வெளியீட்டின் காலப்பகுதி குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கரிசனை கொண்டுள்ளது. இந்தச் சட்ட நகல் மிகவும் சிக்கலானது, மற்றும் இவ்வாறான ஒரு முக்கிய பிரச்சினையில் பொதுமக்களுடன் நேர்மையாக ஈடுபடுவதில் ஆர்வமின்மையைக் குறிக்கின்றது. இங்கு முன்வைக்கப்படும் பூர்வாங்க விடயங்கள், அதிகாரிகள் மற்றும் சட்டமியற்றுபவர்களுடன், இலங்கையில் அத்தகைய சட்டம் தேவையானதா என்பது பற்றிய உரையாடலை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து சட்டமூலத்தின் உட்பிரிவுகள் பற்றிய விரிவான கருத்துக்கள் உரிய நேரத்தில் வெளியிடப்படும்.

தற்போதைய பிரேரணையானது இலங்கையில் துஷ்பிரயோக மரபு மற்றும் அத்தகைய துஷ்பிரயோகத்திற்கு வழிவகுத்துள்ள முறைமையின் வெளிச்சத்தில் இலங்கையை மீட்டெடுக்கும் மற்றும் மீளக் கட்டியெழுப்பும் பாதையை முன்னெடுத்துச் செல்லும் இவ்வேளையில் துஷ்பிரயோகம் மற்றும் தண்டனை வழங்காமை போன்ற நடைமுறைகளை வெளிக்கொண்டுவர

நேர்மையான நடவடிக்கைகளை எடுத்து, இலங்கையில் சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தையும் நிலைநிறுத்துவதை உறுதிப்படுத்துவது கடினமாகும். துஷ்பிரயோகத்தின் வரலாற்றைக் கருத்தில்கொண்டு பொது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை சட்டமியற்றுபவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் தேவைப்படும் அனைத்து வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகளையும் மட்டுப்பாடுகளையும் உரிய முறையில் கையாள்வதன் மூலம் அந்த நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு அரசின் மீது உள்ளது.